අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. ED/4/58/16/08/03/ (VOL - 111)
ඔබේ අංකය / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2023.03. 20

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்கள்,
மாகாணக் கல்விச் செயலாளர்கள்
பரீட்சை ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி அமைச்சின் சகல கல்விப் பணிப்பாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
கோட்ட கல்விப் பணிப்பாளர்கள்
தேசிய பாடசாலை அதிபர்கள்,

**2022/ 2023 வருடாந்த இடமாற்றங்கள் - இலங்கை கல்வி நிர்வாக சேவை I, II,III தரங்கள்**

2022.09.07 ஆம் திகதி வெளியிடப்பட்ட அமைச்சின் 32/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள உப அட்டவணையில் (இணைப்பு 01) குறிப்பிடப்பட்டுள்ள இடமாற்ற இலக்கம் 2248/ 10 மற்றும் 2021.10.04 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் "அ" தொடர் இலக்கம் 01 மற்றும் தொடர் இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகார பிரதிநிதித்துவத்தின் படி 2023.08.02 ஆம் திகதி முதல் செயலாகும் வகையில் அனுமதிக்கின்றேன் கல்வி அமைச்சின் www.moe.gov.lk எனும் வலைத்தளத்தில் வெளிடப்பட்டுள்ள இந்த இடமாற்ற கட்டளையின் படி இடமாற்றம் பெற்ற நீங்கள் நிறுவனத்தில் அனைத்து உத்தியோகத்தர்களும் அறியும் வகையில் குறிப்பிட்ட திகதியில் புதிய பணியிடத்தில் கடமைகளை பொறுப்பேற்கும்படி அறிவுறுத்தவும்.

02. இந்த உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2310/ 29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள நடைமுறை விதி (தொகுதி இலக்கம் 1) இன் XVIII ஆம் அத்தியாயத்தின் விதிமுறைகளுக்கு இணங்க தமது இடாற்ற கோரிக்கை தொடர்பாக வருடாந்த இடமாற்றக் குழுவின் கவனத்திற்கு உள்ளாகவில்லை என்றால் மட்டும் மேன்முறையீடுகளை முன்வைக்கலாம். மேன்முறையீட்டு விண்ணப்பப்படிவத்தின் மாதிரியொன்று (இணைப்பு 02) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் அந்த படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட மேன்முறையீடு விண்ணப்பப்படிவங்களை 2023.04.21 ஆம் திகதிக்கு முன்னர் உதவிச் செயலாளர் (கல்விச் சேவைகள் தாபனம்) கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு முன்னிலைப்படுத்தமாறு தயவுடன் அறியத்தருகின்றேன். இடமாற்ற ஆவணத்தில் உரிய உத்தியோகத்தரின் பெயருக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள தொடர் இலக்கத்தை மேன்முறையீட்டு விண்ணப்பத்தில் கட்டாயமாக குறிப்பிட வேண்டும் என்பதுடன், 2023.04.21 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகள் தொடர்பாக கவனிக்கப்பட மாட்டாது என்பதையும் உரிய அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

03. மேன்முறையீடுகள் முன்வைக்கப்படாவிட்டால் முறையாக சமகால சேவை நிலையத்தில் இருந்து விடுப்பு பெற்று இடமாற்றம் செயலாகும் 2023.08.02 ஆம் திகதி புதிய சேவை நிலையத்தில் கடமைகளை பொறுப்பேற்று தலைவர் மூலமாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் (இணைப்பு 03) பிரகாரம் கல்விச் சேவைகள் தாபன பிரிவிற்கு அறிவிக்கும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

04. நீங்கள் திணைக்களத்தில் /மாகாண சபையில் / நிறுவனத்திற்கு வெளியே இடமாற்றம் வழங்கப்பட்ட அலுவலர்களை **பதிலீட்டாளர் வரும்வரையில் காத்திராமல்** குறிப்பிட்ட தினத்தன்று புதிய பணியிடத்தில் கடமை பொறுப்பேற்பதற்கு ஏதுவாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறியத்தருகின்றேன்.

05. மேலும், இடமாற்றம் பெற்று செல்வதற்கு முன் அலுவலரின் பொறுப்பில் உள்ள அரசுக்கு சொந்தமான கடித ஆவணங்கள் மற்றும் பொருட்களை தாபன தலைவரினால் பெயரிடும் அலுவலர் ஒருவருக்கு முறையாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி உரிய உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை வழங்குமாறு மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்.என் ரணசிங்க
செயலாளர்
கல்வி அமைச்சு

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk